# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம் -07 | குடியியற் கல்வி | நேரம் : 2 மணித்தியாலம் |
| --- | --- | --- |

### பகுதி I

❖ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1) எந்தவொரு சமூகத்திலும் காணப்படும் மிகச் சிறியதும் முக்கியமானதுமான அடிப்படை அலகு?
   1. பாடசாலை 2. சமூகம் 3. குடும்பம் 4. ஆலயம்

2) அம்மா, அப்பா, பிள்ளைகள் மட்டும் சேர்ந்து வாழும் குடும்பம்?
   1. கூட்டுக்குடும்பம் 2. கருக்குடும்பம் 3. விரிந்த குடும்பம் 4. கலப்புக் குடும்பம்

3) கூட்டுக்குடும்பத்தைக் குறிக்கும் வேறு பெயர்?
   1. கருக்குடும்பம் 2. விரிந்த குடும்பம் 3. தனிக்குடும்பம் 4. புதுக்குடும்பம்

4) கூட்டுக் குடும்பத்தின் சிறப்பம்சமாக கருதக் கூடியது?
   1. பிரச்சனைகள் ஏற்படல்
   2. குடும்பத்தின் பலமும் சக்தியும் குறைவாக இருத்தல்
   3. பிள்ளைகளுக்கு பெற்றோர்களினதும் ஏனைய உறுப்பினர்களதும் அன்பும் அரவணைப்பும் பாதுகாப்பும் கிடைக்கும்
   4. உதவி ஒத்தாசை கிடைக்காமை

5) பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைதல் எனும் குறிக்கோளுக்காக நீர் திட்டமிடவேண்டிய நுட்பமுறைகளில் ஒன்று?
   1. கல்வியில் ஈடுபாடு காட்டாதிருத்தல்
   2. ஆசிரியர்களின் ஆலோசனையை ஏற்று தினமும் பாடசாலை செல்லல்
   3. காலஅட்டவணையின் படி கற்காமை
   4. பாடங்களில் ஆர்வம் காட்டாமை

6) வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமானது?
   1. நல்ல நூல்கள் 2. சினிமா 3. போதைப்பொருள் 4. தீயோர் நட்பு

7) கைகள் நடுங்குதல் முகம் சிவந்து போதல் போன்ற தன்மைகள் வெளிப்படும் மனவெழுச்சி சந்தர்ப்பம்?
   1. கோபம் 2. கவலை 3. மகிழ்ச்சி 4. பயம்

8) பொருத்தமற்ற மனவெழுச்சி நிலைகளை கட்டுப்படுத்திக் கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய செயற்பாடுகளில் ஒன்று?
   1. கோபப்படல் 2. கவலைப்படல்
   3. அடுத்தவரை துன்புறுத்துதல் 4. நடத்தல்

9) நற்பிரசை ஒருவரிடத்தில் காணப்படவேண்டிய குணவியல்பு?
   1. பொறாமை 2. அடுத்தவரை ஏளனம் செய்தல்
   3. சண்டையிடல் 4. எளிமையாக வாழ்தல்



kalvi.lk

10) கிறிஸ்தவர்களின் வழிபாட்டுத் தலமாக அமைவது?
1. விகாரை 2. தேவாலயம் 3. பள்ளிவாசல் 4. கோயில்

11) விளையாட்டில் ஈடுபடுவதால் ஒருவரிடத்தில் விருத்தியடையும் பண்பு?
1. சட்டத்திற்கு மதிப்பளித்தல் 2. சோர்வாக இருத்தல்
3. தோல்வியை ஏற்காமை 4. கட்டளைகளை பின்பற்றாமை

12) பொதிசெய்யப்பட்ட உணவுப் பொருளில் கவனிக்கவேண்டிய மிக முக்கிய விடயம்?
1. விலை 2. அளவு 3. நிறம் 4. காலாவதியாகும்திகதி

13) குடும்பத்தின் மூலம் உமக்குக் கிடைக்கும் உரிமைகளில் ஒன்று?
1. பெற்றோரை பாதுகாத்தல் 2. சுகாதார வசதி
3. முதியோரைப் பராமரித்தல் 4. வீட்டு வேலைகள் செய்தல்

14) உங்களது தாயின் அண்ணாவை எவ்வாறு அழைப்பீர்?
1. பெரியப்பா 2. சிற்றப்பா 3. மாமா 4. மச்சான்

15) சாச்சி என்று அழைக்கப்படும் நபர்?
1. பெரியதாய் 2. சிறியதாய் 3. மாமா 4. மாமி

16) விவசாயத்தை சார்ந்த தொழில்களில் ஒன்று?
1. அழகுக்கலை 2. கொழுந்தெடுத்தல் 3. கைத்தொழில் 4. சேவைத் தொழில்

17) பின்வருவனவற்றில் உங்களால் நிறைவேற்றவேண்டிய கடமை?
1. கல்வியை பெற்றுக் கொள்ளல்
2. தொழிலொன்றைச் செய்து பணம் சம்பாதித்தல்
3. பெற்றோருக்கு கீழ்ப்படிதல்
4. உணவு மற்றும் போஷனைகளைப் பெற்றுக் கொள்ளல்

18) சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு எம்மிடம் இருக்க வேண்டிய பண்பு?
1. பொறாமை 2. பலவீனம் 3. முன்கோபம் 4. தன்னம்பிக்கை

19) எமது நாட்டில் வாழும் பெரும்பான்மை இனம்?
1. சிங்களவர் 2. தமிழர் 3. முஸ்லீம் 4. பறங்கியர்

20) அழகியல் செயற்பாட்டில் ஈடுபடுவதால் கிடைக்கும் பயன்களில் ஒன்று?
1. சட்டத்திற்கு மதிப்பளித்தல்
2. மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தல்
3. கட்டளைகளைப் பின்பற்றுதல்
4. குழு உணர்வு

(20x2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

❖ **முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடை தருக.**

***01.***

1) குடியியல் பாட அலகில் 1ம் தவணையில் உம்மால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டு வகை ஒன்றினைக் குறிப்பிடுக?
2) அக்கணிப்பீட்டிற்காக பயன்படுத்திய தர உள்ளீட்டுப் பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக?
3) இக்கணிப்பீட்டின் மூலம் நீர் பெற்றுக்கொண்ட பயன்கள் இரண்டினைக் குறிப்பிடுக?
4) இக்கணிப்பீட்டை மேற்கொள்ளும் போது நீர் எதிர்நோக்கிய சவால்கள் இரண்டினைக் குறிப்பிடுக? (4x3 = 12 புள்ளிகள்)

***02.***

1) குடும்பத்தின் இரு பிரதான வகைகளும் எவை?
2) கருக்குடும்பம் என்றால் என்ன?
3) குடும்பமாக வாழும் போது கிடைக்கும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக?
4) விரிந்த குடும்பத்தின் சிறப்பம்சங்கள் 03 குறிப்பிடுக? (4x3 = 12 புள்ளிகள்)

***03.***

1) ஒருவரை மற்றவரிலிருந்து வேறுபடுத்தும் விடயங்கள் 03 குறிப்பிடுக?
2) உங்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு அவசியமாக விளங்குபவை மூன்றினைக் குறிப்பிடுக?
3) உங்கள் முன்னேற்றத்திற்காக பாடசாலையால் ஆற்றப்படும் பணிகள் 03 குறிப்பிடுக?
4) இலங்கையில் வாழும் மதங்கள் மூன்றினைக் குறிப்பிடுக? (4x3 = 12 புள்ளிகள்)

***04.***

1) சமூக நன்மைக்கு காரணமாக அமையும் நிறுவனங்கள் 03 குறிப்பிடுக?
2) விளையாட்டில் ஈடுபடுவதால் ஒருவரிடத்தில் விருத்தியடையும் பண்புகள் 03 குறிப்பிடுக?
3) ஓய்வு நேரங்களில் உம்மால் ஈடுபடக்கூடிய அழகியல் செயற்பாடுகள் 03 குறிப்பிடுக?
4) நடைமுறையிலுள்ள குடும்ப அலகில் எதிர்கொள்ளும் சவால்கள் 03 குறிப்பிடுக?

(4x3 = 12 புள்ளிகள்)

***05.***

1) மன எழுச்சிகள் 03 குறிப்பிடுக?
2) பொருத்தமற்ற மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய செயற்பாடுகள் 03 குறிப்பிடுக?
3) பதிலீட்டுப் பொருட்கள் என்றால் என்ன?
4) பண்டங்களின் விலைகளை அறிந்து கொள்வதற்கு பயன்படுத்தப் படும் சாதனங்கள் 03 குறிப்பிடுக? (4x3 = 12 புள்ளிகள்)

***06.***

1) வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் தொழில்கள் 03 குறிப்பிடுக?
2) பெற்றோருக்குரிய கடமைகள் 03 குறிப்பிடுக?
3) நற்பிரசை ஒருவரிடத்தில் காணப்படவேண்டிய குணவியல்புகள் 03 குறிப்பிடுக?
4) அயலவருடன் நட்புறவைப் பேணும் சந்தர்ப்பங்கள் 03 குறிப்பிடுக?

(4x3 = 12 புள்ளிகள்)



kalvi.lk

## தரம் 01 - 10

# 3ம் தவணை

**REVISION I PAPER DISCUSSION**

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

**JOIN NOW**

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

**WHATSAPP**

**075 287 1457**